தினமணி

# முல்லைப் பெரியாறும் "பிரவம்' இடைத்தேர்தலும்!

அ. சர்ஃப்ராஸ்

First Published : 02 Dec 2011 03:00:00 AM IST

Last Updated : 02 Dec 2011 04:49:00 AM IST



புது தில்லி, டிச. 1: கேரளத்தில் காங்கிரஸ் ஆட்சி கவிழும் நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதைக் காப்பாற்றவே முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக உள்ளது என்ற ஒரு பிரசாரத்தைத் திடீரென்று அந்த மாநில அரசு கையில் எடுத்துள்ளது என்று நம்பகமான அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

""முல்லைப் பெரியாறு அணை திடீரென ஒருமுறை ஏற்படும் நிலநடுக்கத்தில் வலுவிழந்துவிடவில்லை. முல்லைப் பெரியாறு அணையின் பலம் குறைந்துள்ளது என்று ஆளும் காங்கிரஸ் கூட்டணி கூறுவது அங்கு ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான். அதன் விளைவுதான் "கேரளத்துக்கு பாதுகாப்பு; தமிழகத்துக்கு தண்ணீர்' என்ற தாரக மந்திரம்'' என்று வெட்டவெளிச்சமாகி இருக்கிறது.

1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் முல்லைப் பெரியாறு அணையில் விரிசல் ஏற்பட்டுவிட்டதாகக் கூறத் தொடங்கியது கேரள அரசு.

அதை நம்பிய தமிழக அரசும் நீரின் அளவை 136 அடிக்குக் குறைத்தது. அதையடுத்து, அணையின் நீர் அளவை 142 அடியாக உயர்த்த 2006 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இன்று வரை நிறைவேற்ற முடியவில்லை.

அணையின் ஸ்திரத் தன்மையை உறுதி செய்ய மீண்டும் ஆய்வு நடத்த உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அமைக்கப்பட்டது.

ஆறு மாத காலத்தில் அணை குறித்த அறிக்கையை அளிக்க வேண்டும் என்று கால நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது இந்த குழுவின் பதவிக்காலம் நீடித்து கொண்டே போகிறது.

இந்த குழுவின் முதற்கட்ட அறிக்கையை வரும் ஜனவரி மாதம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யக் குழுத் தலைவர் திட்டமிட்டுள்ளார்.

ஒரு வேளை இந்த அறிக்கையில் அணையின் ஸ்திரத் தன்மைக்குப் பாதிப்பில்லை என்று குழு அறிவித்துவிட்டால், அப்போது அறிக்கையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த இயலாது. காரணம், நீதிமன்ற உத்தரவை மீறிய செயலாகிவிடும். எனவே, இப்போதிருந்தே ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கியுள்ளன கேரள அரசியல் கட்சிகள்.

ஆட்சியைக் காப்பாற்ற: முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக உள்ளதாகவும் அணை உடைந்தால் எர்ணாகுளம், ஆலப்புழை உள்பட 4 மாவட்டங்கள் மூழ்கிவிடும் என்று அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்படும் பிரசாரம், உண்மையில் ஆளும் அரசின் ஆட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் என்று தெரிகிறது.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற கேரள சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 72 இடங்களையும் இடதுசாரிகள் முற்போக்குக் கூட்டணி 68 இடங்களையும் கைப்பற்றின.

கேரள காங்கிரஸ் கட்சியின் (ஜேக்கப் பிரிவின்) மூத்த தலைவர் டி.எம். ஜேக்கப், எர்ணாகுளம் மாவட்டம் பிரவம் சட்டப் பேரவைத் தொகுதியில் ஐந்தாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு காங்கிரஸ் அமைச்சரவையில் உணவுத்துறை அமைச்சராக இருந்தவர்.

கடந்த அக்டோபர் மாதம் அவர் மரணமடைந்ததால் "பிரவம்' தொகுதியில் ஜனவரி அல்லது பிப்ரவரி மாதம் இடைத் தேர்தல் நடைபெற உள்ளது.

140 உறுப்பினர்களைக் கொண்ட கேரள சட்டப் பேரவையில் ஆளும் ஐக்கிய ஜனநாயக முன்னணி 72 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. டி.எம். ஜேக்கப் மறைவுக்குப் பிறகு 71 ஆகக் குறைந்துவிட்டது.

அது மட்டும் இன்றி சட்டப் பேரவைத் தலைவராக ஆளும் கட்சி சார்பில் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதால், ஆளும் கூட்டணியின் எண்ணிக்கை 70 ஆகக் குறைந்துவிடும். "பிரவம்' தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவினால் இடதுசாரிகளின் எண்ணிக்கையும் காங்கிரஸ் கட்சியின் எண்ணிக்கையும் கிட்டத்தட்ட சமமாக அமையும். இதனால்தான், கேரள முதல்வர் உம்மன் சாண்டி இந்த விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

கடந்த தேர்தலில்தான் டி.எம். ஜேக்கப் 157 வாக்கு வித்தியாசத்தில்தான் தன்னை எதிர்த்து போட்டியிட்ட இடதுசாரி ஜனநாயக முன்னணி வேட்பாளர் எம்.ஜே. ஜேக்கப்பைத் தோற்கடித்தார்.

நடைபெற இருக்கும் இடைத்தேர்தலில் டி.எம். ஜேக்கப்பின் மரணத்தைத் தொடர்ந்து அந்தக் கட்சி வலுவிழந்திருப்பதால், இடதுசாரி முன்னணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கருதப்படுகிறது.

ஆகையால் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் முல்லைப் பெரியாறு பிரச்னையைக் கேரள ஆளும் கூட்டணி கையிலெடுத்திருக்கிறது. அது மட்டுமின்றி முல்லைப் பெரியாறு அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் "பிரவம்' தொகுதியில் ஓடும் மூவாற்றுப் புழை ஆற்றின் வழியாகச் செல்லும்.

இதனால் முல்லைப் பெரியாறு அணை உடைந்தால் "பிரவம்' தொகுதி உள்பட எர்ணாகுளம் மாவட்டமே அழிந்துவிடும் என்ற தவறான பிரசாரத்தைப் பரப்பி வேண்டுமென்றே மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்புகின்றனர்.

முல்லைப் பெரியாறு அணைக்குப் பதிலாகப் புதிய அணை கட்டப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கோ அல்லது மத்திய நீர் வளத்துறை அமைச்சரோ உறுதியளித்தால் "பிரவம்' இடைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி இடைத் தேர்தலில் எளிதில் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைத்து கொள்ளும் என்ற மனக் கணக்கில்தான் ஆளும் ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி இந்தப் பிரச்னையைப் பெரிதுபடுத்துகிறது என்று தெரிகிறது.

**அதிகம் சிக்கும் பாம்பு மீன்கள்!**

First Published : 02 Dec 2011 01:39:21 AM IST



அதிகம் சிக்கும் பாம்பு மீன்கள்!

காரைக்கால், டிச. 1: காரைக்கால் கடல் பகுதியில் மருத்துவக் குணம் கொண்ட பாம்பு மீன்கள் என்று அழைக்கப்படும் குழவி மீன்கள் அதிகம் சிக்குவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடல் சீற்றத்தின் காரணமாக, காரைக்கால் மீனவர்கள் கடந்த வாரத்தில் கடலுக்கு செல்லாமல் இருந்தனர். சீற்றம் தணிந்ததையடுத்து, கடந்த சில நாள்களாக மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப்படகுகளை இயக்கிக்கொண்டு மீனவர்கள் கடலுக்கு சென்று வருகின்றனர்.

கடந்த 4 நாள்களுக்கு முன்பு சென்ற விசைப்படகுகளில் சில வியாழக்கிழமை மீன், நண்டு, இறால், கனவா மீன்களுடன் துறைமுகம் திரும்பின.
பெரும்பாலான மீனவர்கள் பாம்பு மீன் என்று சொல்லக்கூடிய அதன் உருவமைப்புக் கொண்ட குழவி மீன்களை பிடித்து வந்திருந்தனர். இதை வெளியூர் முகவர்கள் விரும்பி வாங்கினர்.
இதுகுறித்து மீனவர்கள் கூறியது:
பல்வேறு மீன்கள் வலையில் சிக்கும்போது, குழவி மீன்களும் சிக்குவது உண்டு. ஆனால், தற்போது அதிகளவில் கிடைத்துள்ளன. ஒரு கிலோ ரூ. 75 முதல் முகவர்களுக்கு விற்கப்படும். இந்த வகை மீனை அசைவ ஹோட்டல் நடத்துவோர் விரும்பி வாங்குவர். இது மருத்துவக் குணம் கொண்டது. குறிப்பாக, மனிதர்களுக்கு இடுப்பு வலியை குணமாக்கும் தன்மை குழவி மீனுக்கு உண்டு என்றனர்.
கடல் சீற்றத்துக்கு பிறகு கடலுக்குள் சென்ற படகுகள் அதிகமாக வியாழக்கிழமை காரைக்கால் துறைமுகத்துக்கு திரும்பியதையொட்டி, உள்ளூர் மீன் வியாபாரிகளின் கூட்டம் அதிகமாக இருந்தது. படகிலிருந்து இறக்கப்பட்ட குழவி மீன்.

**மழையால் பாதிக்கப்பட்ட நெல் பயிர்களை பாதுகாக்க வேளாண் துறை யோசனை**

First Published : 01 Dec 2011 02:10:15 PM IST

திருச்சி, நவ. 30: திருச்சி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நெல் பயிர்களைப் பாதுகாக்க வேளாண் துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து மாவட்ட வேளாண் துறை இணை இயக்குநர் ஜெ. சேகர் தெரிவித்திருப்பது:
"திருச்சி மாவட்டத்தில் இப்போது பெய்து வரும் பலத்த மழையால் பல்வேறு பகுதிகளில் நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
தண்ணீர் தேங்கியுள்ள பகுதியில் வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும். மேலும், அதிக நாற்றுகள் உள்ள குத்துகளிலிருந்து சில நாற்றுகளை எடுத்து, நாற்றுகள் இல்லாத இடங்களில் நடவு செய்ய வேண்டும். அதே ரக நாற்றுகள் கிடைத்தால் போக்கிடங்களில் நடவு செய்யலாம்.
தண்ணீரில் மூழ்கியுள்ள நெல் பயிருக்கு உடனடியாக 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ யூரியாவும், ஒரு கிலோ ஜிங்க் சல்பேட்டும் கலந்து கைத் தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேளையில் தெளிக்க வேண்டும்.
தண்ணீர் வடிந்து விட்ட நிலையில், ஊட்டச்சத்து பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ள நெல் பயிருக்கு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம், 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை கலந்து ஒரு நாள் வைத்திருந்து பிறகு 17 கிலோ பொட்டாஷ் கலந்து மேலுரமாக

இட வேண்டும். இந்த உரங்களை இடும்போது வயலில் சீராக தண்ணீர் வைத்துக் கொண்டும், தண்ணீர் வெளியே விடாதவாறும் பராமரிக்க வேண்டும். சூல் கட்டும் மற்றும் பூக்கும் பருவத்தில் உள்ள பயிர்களுக்கு 2 கிலோ டி.ஏ.பி. உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து மறுநாள் தெளிவான கரைசலை வடிகட்ட வேண்டும்.

அத்துடன், ஒரு கிலோ யூரியா, ஒரு கிலோ பொட்டாஷ் உரங்களை கலந்து 190 லிட்டர் தண்ணீர் சேர்த்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இதேபோல, ஊட்டச்சத்து மேலாண்மை மேற்கொண்டால் மழை நீரால் பாதிக்கப்பட்ட பயிர்களைக் காப்பாற்றலாம்' என்றார் சேகர்.

**காரைக்காலில் டிச. 12 வரை இலவச அரிசி, கோதுமை பெறலாம்**

First Published : 01 Dec 2011 01:07:17 PM IST

காரைக்கால், நவ. 30: காரைக்காலில் டிச. 12-ம் தேதி வரை இலவச அரிசி, கோதுமை பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காரைக்கால் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை துணை இயக்குநர் ஆர். சந்திரசேகரன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து சிவப்பு மற்றும் மஞ்சள் நிற குடும்ப உணவு பங்கீட்டு அட்டைதாரர்கள், நவம்பர் மாதத்துக்கான இலவச அரிசி மற்றும் 5 கிலோ இலவச கோதுமையை வரும் 12-ம் தேதி வரை அந்தந்த நியாய விலைக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

First Published : 01 Dec 2011 01:06:10 PM IST

மேட்டூர், நவ. 30: காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதனால், அணையின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. புதன்கிழமை மாலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 13,103 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது.

வினாடிக்கு 1,569 கன அடி வீதம் நீர் திறக்கப்பட்டது. அணையின் நீர் மட்டம் 106.08 அடியாக இருந்தது. நீர் இருப்பு 72.94 டி.எம்.சி.

**அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி தொழில்நுட்பப் பயிற்சி**

First Published : 01 Dec 2011 12:30:25 PM IST

சிங்கம்புணரி, நவ. 30: சிங்கம்புணரியில் விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி தொழில்நுட்பப் பயிற்சி இரண்டு நாள்கள் நடைபெற்றது.

சிங்கம்புணரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில், ஒன்றியத்தில் உள்ள எம்.கோவில்பட்டி, செருதப்பட்டி, அரளிக்கோட்டை, கிருங்காக்கோட்டை, ஒடுவன்பட்டி, வையாபுரிப்பட்டி, செல்லியம்பட்டி ஆகிய கிராமங்களில் இருந்து 20 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் பயன்கள், விளைபொருள் ஈட்டுக் கடன் திட்டம், உளர்கலம் கட்டும் திட்டம் ஆகியவற்றை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கண்காணிப்பாளர் (பொறுப்பு) பாலசுப்பிரமணியம் விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார். மேலும் பயிற்சியில் வேளாண்மை உதவி அலுவலர் (வேளாண் வணிகம்) ரத்தினகாந்தி, நீர்வள நிலவளத் திட்டம், சந்தை இணைப்பு, தரம் பிரித்தல், குழு அமைத்தல், வேளாண் விளைபொருள்களை சந்தையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்து லாபம் பெறுமாறு விவசாயிகளை கேட்டுக் கொண்டார்.

மேலும் பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் (விளம்பரம் மற்றும் பிரச்சாரம்) சாத்தப்பன் பயிற்சியில் அறுவடைக்குப் பின் விளைபொருள்களை சந்தைப்படுத்துதல், அக்மார்க் தரம் பிரித்தல், அக்மார்க் நெட், சந்தைக்கேற்றவாறு பயிர் சாகுபடி மற்றும், சேமிப்பு முறைகள் சந்தை நிலவரங்களை விளக்கமாகவும், தெளிவாகவும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு வாணிப வேளாண் விற்பனை வாரியத்தினர் செய்திருந்தனர்.

**தோட்டப் பயிர்களுக்கும் இழப்பீடு வழங்கப்படுமா?**

First Published : 01 Dec 2011 10:17:00 AM IST

சிதம்பரம், நவ. 30: காட்டுமன்னார்கோவில் பகுதியில் கனமழையால் தண்ணீர் தேங்கி வெண்டைக்காய் உள்ளிட்ட தோட்டப் பயிர்கள் சேதமடைந்துள்ளன. எனவே அவற்றுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காட்டுமன்னார்கோவில் அருகே வீராணம் ஏரிக் கரையோரம் சித்தமல்லி கிராமம் உள்ளது. அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஆண்டிமடம், செந்துறை, கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம்,

கருவேப்பிலங்குறிச்சி ஆகிய பகுதிகளில் பெய்யும் மழை நீர் செங்கால் ஓடை வழியாக சித்தமல்லி கிராமத்தை கடந்து வீராணம் ஏரிக்கு செல்கிறது.

ஆண்டுதோறும் மழைக்காலங்களில் செங்கால் ஓடையில் வெள்ளப் பெருக்கெடுத்து சித்தமல்லி கிராமத்தில் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனால் நஷ்டமடைந்து வந்த அப்பகுதி நெல் விவசாயிகள், கடந்த சில ஆண்டுகளாக தேக்கு, சாமந்திப்பூ, வெண்டைக்காய், பாகற்காய், கத்தரிகாய், அரும்பு, மணிலா, கரும்பு என பல்வேறு தோட்டப் பயிர்களை பயிரிட்டு வருகின்றனர்.

சித்தமல்லி பகுதியில் பயிரிடப்படும் வெண்டை, கத்தரி, பாகற்காய் உள்ளிட்டவை கும்பகோணம், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுகளில் விற்பனை செய்து வருகின்றனர். தேக்கு மரக்கன்றுகள் பெங்களூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இப்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் இப்பயிர்கள் சேதம் அடைந்துள்ளன. தொடர் கனமழையினாலும், செங்கால் ஓடையில் கூடுதல் நீர் வரத்தாலும் வெண்டை உள்ளிட்ட வயல்களில் நீர் தேங்கி நிற்பதால் வேர்கள் அழுகி பயிர் முற்றிலும் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தோட்டப் பயிர்களுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**மஞ்சள் பயிரில் கிழங்கு அழுகல் நோய் கட்டுப்படுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,00:56 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "மஞ்சள் பயிரில் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த, பயிர் பாதுகாப்பு முறையை பின்பற்ற வேண்டும்' என, புதுச்சத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் கங்காதரன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் அடுத்த புதுச்சத்திரம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் பயிரில் காணப்படும் கிழங்கு அழுகல் நோய் மற்றும் புழுவை கட்டுப்படுத்த, காய்ந்த சருகுகளை அகற்றி வயலைவிட்டு வெளியே கொண்டு வந்து எரிக்க வேண்டும்.

ஒரு லிட்டர் தண்ணீரில், 2.5 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு பூஞ்சான கொல்லி மருந்தை கரைத்து, கிழங்கு அழுகல் நோய் தாக்கியுள்ள பகுதிகளில் மண்ணில் ஊற்ற வேண்டும்.மஞ்சள் பயிரை, தற்போது தாக்கி வரும் கிழங்கு புழுவைக் கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மி.லி., குளோர்பைரிபாஸ் மற்றும் ஒரு மி.லி., டைகுளோர்வாஸ் மருந்து வீதம் கலந்து ஊற்ற வேண்டும். விதை தெளிப்பான் மற்றும் கைத்தெளிப்பான் மூலமும் மஞ்சள் பயிரில் அடித்தண்டு மற்றும் மண் பகுதியில் படுமாறு தெளித்து கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**சொட்டுநீர் பாசனம் அமைக்க பெயர் பதிவு உதவி இயக்குனர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,00:53 IST

ராசிபுரம்: "சொட்டுநீர் பாசனம் அமைக்க விவசாயிகள் முன்பதிவு செய்ய வேண்டும்' என, வெண்ணந்தூர் வட்டார தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் தமிழ்ச்செல்வி தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:விவசாயிகள், தாங்கள் பயிரிடும் எல்லா வகை பயிர்களுக்கும், சொட்டு நீர் பாசனம் அமைத்துக் கொள்ளலாம். சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியமும், பெரிய விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியமும் வழங்குவதாக, அரசு அறிவித்துள்ளது.

சொட்டு நீர் பாசனம் அமைத்துக் கொள்ள விரும்பும் விவசாயிகள், தங்கள் நிலத்தின் பட்டா, பயிர் விவரம் அடங்கிய அடங்கல், வயல் வரைபடம், ரேஷன் கார்டு, விவசாயி ஃபோட்டோ ஆகியவற்றுடன் தோட்டக்கலை துறை அலுவலகத்துக்கு சென்று தங்கள் பெயரை பதிவு செய்துகொள்ள வேண்டும்.பதிவு செய்து கொண்ட விவசாயிகளுக்கு மட்டுமே முன்னுரிமை அடிப்படையில் மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,01:43 IST

தர்மபுரி: தர்மபுரியை அடுத்த சோலைக்கொட்டாயில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.பஞ்சாயத்து தலைவர் பாலு தலைமை வகித்தார்.

மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ராஜன், வேளாண் உதவி இயக்குனர் (விதை சான்று) வெங்கடேசன், வட்டார வேளாண் உதவி இயக்குனர் முருகேசன் ஆகியோர் பேசினர்.வேளாண் இணை இயக்குனர் ராஜன் பேசியாதவது:பூக்கும் தருணத்தில் உள்ள பயிறு வகை பயிர்களுக்கு இரண்டு சதவீதம் டி.ஏ.பி., கரைசலை தெளிக்க வேண்டும். இதற்கு ஏக்கருக்கு 5 கிலோ டி.ஏ.பி., உரத்தை 10 லிட்டர் நீரில் முதல் நாள் இரவு ஊர வைத்து மறு நாள் காலை தெளிந்த நீரை வடிகட்டி 250 லிட்டர் நீரில் கலந்து கைதெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்க வேணடும்.

இது பூக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்வதோடு, தரமான விதைகளை உருவாக்கி மகசூல் அதிகரிக் செய்யும்.இவ்வாறு பேசினார்.வேளாண் உதவி இயக்குனர் முருகேசன் பேசியதாவது:ஒரு ஏக்கருக்கு எட்டு கிலோ தரமான விதை போதுமானது. உயிர் உரவிதை நேர்த்திக்கு இரண்டு பொட்டலம் ரைசோபியம் 400 மி.லிட்டர் ஆறிய கஞ்சியுடன் கலந்து அரைமணி நேரம் நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்துக்குள் விதைக்க வேண்டும். பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிருக்கு வரிசைக்கு வரிசை 30 செ.மீ., பயிருக்கு, பயிர் 10 செ.மீ., இடைவெளியில் இருக்குமாறு விதைக்க வேண்டும். ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் என பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட வேண்டும்.இவ்வாறு பேசினார்.வேளாண் அலுவலர் அர்சுணன் பயறு வகை விதை நேர்த்தி செயல் விளக்கம் செய்து காட்டினார். உதவி வேளாண் அலுவலர் நாகமணி நன்றி கூறினார்.

**விதையின் தன்மையை அறிய வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,00:38 IST

கருத்தை பதிவு செய்ய

தூத்துக்குடி : தூத்துக்குடியில் உள்ள விதை பரிசோதனை மையத்தில் விதையின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம் என்று வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார். தூத்துக்குடி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் நெடுஞ்செழியன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியுள்ளதாவது; ஒரு விதையின் ஈரப்பதம் என்பது மிக முக்கியமான காரணியாகும். அது விதையின் தரத்தையும், அந்த விதையினை எத்தனை காலம் தரமாக சேமிக்க முடியும் என்பதையும் நிர்ணயம் செய்கிறது. விதையின் ஈரப்பதத்தினை அறிந்து கொள்ள தங்கள் விதைக்குவியலில் இருந்து அந்த குவியலை பிரதிபலிக்கின்ற வகையில் 100 கிராம் அளவு மாதிரி எடுத்து 700காஜ் பாலித்தீன் பைகளில் போட்டு காற்று அல்லது நீராவி புகாத வண்ணம் எலக்ட்ரிக் சீலரிலோ அல்லது மெழுகுவர்த்தி வெப்பம் மூலமாக நன்றாக சீலிட வேண்டும். அந்த விதை

மாதிரியை 30 ரூபாய் செலுத்தி தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ஆபிஸ் வளாகத்தில் உள்ள வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் இயங்கி வரும் மாவட்ட விதை பரிசோதனை நிலையத்தில் கொடுத்து விதை ஈரப்பதத்தினை அறிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**8ம் நம்பர் மஞ்சளை அறுவடை செய்வது பாதிப்பு கோபி வட்டார விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,01:17 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: கோபியில் ஒரு மாதமாக பெய்த தொடர் மழையால் மஞ்சள் அறுவடை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. முற்றிய நிலையில் உள்ள மஞ்சளை எப்போது அறுவடை செய்வது என தெரியாமல் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.சென்ற இரண்டு ஆண்டுகளாக மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைத்ததால், விவசாயிகள் மஞ்சளை அதிகளவில் பயிரிடத் துவங்கினர்.கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசனப் பகுதிகளில், 13 ஆயிரம் ஹெக்டேரில் மஞ்சள் விவசாயிகள் பயிரிட்டனர். மஞ்சள் முற்றிய நிலையில், விவசாயிகள் அறுவடைக்கு தயாராக இருந்தனர்.வடகிழக்கு பருவமழை காரணமாக கோபி வட்டாரத்தில் மழை வெளுத்து வாங்கியது. கோபி, நம்பியூர், டி.என்.பாளையம் பகுதியில் உள்ள நெல், கரும்பு மற்றும் மஞ்சள் பயிரிட்ட வயல்களில் தண்ணீர் தேங்கி இருப்பதால், களை எடுத்தல், அறுவடை செய்தல், உரமிடுதல் உள்ளிட்ட விவசாயப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டது.

அனைத்து பகுதிகளிலும் மஞ்சள் பயிர் அறுவடை நிலையை எட்டியுள்ளது. குறிப்பாக, எட்டாம் நம்பர் மஞ்சள் அறுவடைக்கு ஆயத்தமாகி உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் அறுவடை துவங்கி, ஜனவரி 10ம் தேதிக்குள் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வந்து விடும். நடப்பாண்டு எட்டாம் நம்பர் அறுவடைக்கு ஆயத்தமாகியுள்ள நிலையில், சென்ற ஒரு மாதமாக பெய்யும் மழையால் அறுவடை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள் கூறியதாவது:கோபி வட்டாரத்தில் சென்ற ஒரு மாதமாக நல்ல மழை பெய்துள்ளது.

இதனால் கீழ்பவானி, அரக்கன் கோட்டை, தடப்பள்ளி பாசன பகுதிகளில் மழை நீர் புகுந்து விட்டதால், விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
எட்டாம் நம்பர் மஞ்சளை அறுவடை செய்ய தயாராக இருந்தோம். ஆனால் தொடர் மழை காரணமாக மஞ்சளை அறுவடை செய்து, வேக வைத்து காய வைக்க முடியாது. பொதுவாக, மஞ்சளை வேக வைக்க, அறுக்கப்பட்ட மஞ்சளின் இலையை பயன்படுத்துவது வழக்கம். கோபி

பகுதியில் வானம் மேகமூட்டமாக இருப்பதால், அறுவடை செய்யப்பட்ட மஞ்சள் பயிரின் இலைகளை காயவைக்க முடியாது. மஞ்சளை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் ஒரு மாதத்தில் 10 அடி உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,01:22 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: வடகிழக்கு பருவ மழையால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கடந்த ஒரு மாதத்தில் 10 அடி உயர்ந்துள்ளது.கோபி, சத்தி மற்றும் பவானி வட்டார பகுதிகளில் சென்ற நவம்பர் மாதம் துவக்கத்தில் இருந்து பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. குறிப்பாக வடகிழக்கு பருவமழை மற்றும் குறைந்த காற்றழுத்த தாழ்வு காரணமாக கோபி வட்டாரத்தில், நவம்பர் மாதம், 923 மி.மீ., மழை பெய்துள்ளது. தொடர் மழையால் குண்டேரிப்பள்ளம், பெரும்பள்ளம், வரட்டுபள்ளம் அணைகள், சஞ்சீவிராயன் ஏரி, ஓடத்துறை ஏரி, கொளப்பலூர் ஏரி ஆகியவை நிரம்பியுள்ளது. பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நவம்பர் 1ம் தேதி முதல் மழை பெய்யத் துவங்கியதால் பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது.

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் அக்., 24 தேதி 78 அடியாக இருந்தது. கோபி, சத்தி மற்றும் பவானி பகுதிகளில் மழை பெய்ததாலும், பவானியாறு மற்றும் கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடுவது அவ்வப்போது நிறுத்தப்பட்டதாலும் நீர்மட்டம் உயர்ந்தது.நேற்று மதியம் 12 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 88.68 அடியாக இருந்தது. விநாடிக்கு 3,274 கன அடி நீர் வரத்தாகிறது. கீழ்பவானி பாசனத்துக்கும், ஆற்றிலும் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. ஒரு மாதத்தில் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 10 அடி உயர்ந்துள்ளது. நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் நான்கு ஆண்டுகளுக்கு பிறகு, பவானிசாகர் அணை நிரம்பும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர். கடைசியாக பவானிசாகர் அணை, 2007 நவம்பர் 10ம் தேதி நிரம்பியது.கோபி வட்டார பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக மழை சற்று ஓய்ந்திருந்தது. இதனால் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் களை எடுப்பு உள்ளிட்ட விவசாய பணிகள் நடக்கிறது.

**தொடர் மழையால் கொட்டாம்பட்டியில் பயிர்கள் சேதம் : தண்ணீரால் கண்ணீரில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,01:29 IST

கொட்டாம்பட்டி : மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டியில் பெய்யும் தொடர் மழையால் நெல், கடலை, வெங்காயம் போன்ற பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகி விடுகின்றது. நஷ்டத்தால் விவசாயிகள் கண்ணீர் விடுகின்றனர்.
மாவட்டத்தில் மொத்தம் 3,301 கண்மாய்கள் உள்ளன. கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 900 கண்மாய்கள் தொடர் மழையால் நிரம்பி மறுகால் பாய்கின்றன. மழை பெய்து வருவதால் காட்டாற்று வெள்ளம் ஊருக்குள் புகுந்து வருகிறது. நேற்று முன்தினம் பெய்த கனமழையால் கருங்காலக்குடி - வஞ்சிநகரம் ரோடு வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. தென்னை மரங்கள் வேருடன் சாய்ந்தன. காட்டாற்று வெள்ளத்தில் மரங்கள் இழுத்து செல்லப்பட்டன.பயிர்கள் நாசம்: ஒன்றியத்துக்கு உட்பட்ட வெள்ளாளபட்டி, வெ.புதூர், மணப்பச்சேரி, நீதிபுரம், காரேந்தபட்டி, தனிச்சியம், குன்னாரம்பட்டி, வெள்ளினிபட்டி, சிலம்பன்கோன்பட்டி, தொந்திலிங்கபுரத்தில் 300 எக்டேரில் பயிரிடப்பட்ட நெல், கடலை, உளுந்து, வெங்காயம், மொச்சை பயிர்கள் பத்து நாட்களாக தண்ணீரில் மூழ்கியுள்ளன. கடும் நஷ்டத்தால் விவசாயிகள் கண்ணீர் விடுகின்றனர்.

விவசாயிகள் குமுறல்:
*விவசாயி சொக்கலிங்கம், மணப்பச்சேரி: கண்மாய்களை தூர்வாரவில்லை. கரைகள் பலப்படுத்தாமல் உள்ளது. கால்வாய்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் காட்டாற்று வெள்ளம் பயிர்களை சூழ்ந்து உள்ளன. மழை வரும்போதெல்லாம் பயிர்கள் நாசமாவதும், விவசாயிகள் கடும் நஷ்டம் அடைவதும் ஆண்டு தோறும் தொடர்
கிறது. கண்மாய்களை தூர்வாரி, கால்வாய்களின் ஆக்கிரமிப்புக்களை அகற்றினால் மட்டுமே தீர்வு ஏற்படும்.
*விவசாயி சேகர், வெள்ளினிப்பட்டி: நெல், கடலை பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. விவசாயிகளின் துயர் துடைக்க அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும்.
கைவிரிப்பு:
*வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துக்குமார்: வெள்ள நீர் வடிந்த பின் தான் சேதம் குறித்து மதிப்பிட முடியும். வெள்ள பாதிப்பு ஏற்படும்போது மீட்பு பணிக்கான நிதி கூட இல்லை. அரசிடம் இருந்து நிதி வந்தால் மட்டுமே நிலைமையை சமாளிக்க முடியும்.

**டிச.,5ல் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,01:31 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : கடன் பெறாத விவசாயிகளை கண்டறிந்து கடன் வழங்கும் முகாம், மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றிய அலுவலகங்களிலும் வரும் 5ல் நடக்கிறது. கோவை மாவட்ட கலெக்டர் கருணாகரன் வெளியிட்ட அறிக்கை:இதுநாள் வரை எந்த வங்கியிலும்(துவக்க கூட்டுறவு வங்கி உள்பட) கடன் பெறாத விவசாயிகளை கண்டறிந்து கடன் வழங்கும் முகாம் வரும் டிச., 5ம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை மாவட்டத்திலுள்ள அனைத்து பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகங்களிலும் நடக்க உள்ளது. இதுவரை கடன் பெறாத விவசாயிகளும், இதுவரை வங்கிகள் மூலமாக எவ்வித கடனுதவியும் பெறாத விவசாயம் சாராத தொழில் செய்து வரும் நபர்களும், முகாமில் நேரடியாக பங்கேற்று தங்கள் பெயர் மற்றும் முகவரியை பதிவு செய்து கொள்ளலாம்.

பெயர் பதிவு செய்ய வரும் நபர்கள், தங்களது இருப்பிடத்தை உறுதி செய்யும் சான்றுகளான ரேஷன் கார்டு அல்லது வேறு ஒரு ஆவணத்துடன் வர வேண்டும். முகாமில், அந்தந்த வட்டார வேளாண் அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர், கால்நடை மருத்துவர் மற்றும் வட்டார வங்கி மேலாளர்கள், தொடக்க வேளாண் சங்க செயலர்கள் அனைவரும் பங்கேற்பர். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பஞ்சாயத்து தலைவர்கள் முகாமை ஒருங்கிணைந்து நடத்துவர். அந்தந்த வட்டாரங்களில் செயல்படும் வங்கிகள், தொடக்க வேளாண் சங்கங்கள், தங்களது வங்கிகளில் கடன் பெற்றோர் பட்டியலை கிராமம் வாரியாக தயாரித்து கொண்டு வர வேண்டும். இதுவரை எவ்வித கடனும் பெறாத விவசாயிகள் மற்றும் இதர நபர்கள், முகாமில் பங்கேற்று வங்கி சேவையை பெற்று பயன் பெறலாம். இத்திட்டத்தின் துவக்க விழா, மதுக்கரை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடக்கிறது.

**திராட்சையில் சாம்பல் நோய் கட்டுப்படுத்த ஆலோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2011,22:40 IST

தேனி : திராட்சையில் பரவி வரும் சாம்பல் நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது. தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜன் கூறியதாவது: பனிக்காலம் தொடங்கி உள்ளதாலும், காற்றில் ஈரப்பதம் அதிகமாகி உள்ளதாலும் திராட்சை

தோட்டங்களில் அடிச்சாம்பல் மற்றும் மேல்சாம்பல் நோய் தாக்கும் சூழ்நிலை உள்ளது. இந்த நோய் இலைகளை தாக்கும். பூங்கொத்தும், பிஞ்சுகளும் கூட பாதிக்கப்படுகிறது. இலையின் அடிப்பாகத்தில் வெண்மை நிற பூஞ்சாண வளர்ச்சி காணப்படும். அதற்கு நேர் எதிர் இலையின் மேல் பகுதி மஞ்சள் நிற புள்ளிகள் தோன்றும்.

நோயின் தன்மை தீவிரமடைந்த நிலையில் இலையின் மேல்பகுதியில் பிரவுன் கலரில் இலைப்புள்ளிகள் காணப்படும். புதிதாக முதிர்ந்த இலைகளையும் இந்நோய் தாக்கும். இந்நோயினை கட்டுப்படுத்த போர்டோக் கலவை ஒரு சதவீதம், மேன்கோசெப் 0.2 சதவீதம், ரிடோமில் 0.2சதவீதம், அலியட்டில் 0.2 சதவீதம் இவற்றில் ஏதாவது ஒன்றினை கைத்தெளிப்பான் மூலம் நன்கு நனையம் வகையில் 15நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

**துவரை சாகுபடி செய்தால் மானியம்: வேளாண் துறை அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2011,23:08 IST

கருத்தை பதிவு செய்ய

அன்னூர் : "துவரை சாகுபடி செய்ய மானியம் அளிக்கப்படுகிறது' என, வேளாண்துறை தெரிவித்துள்ளது. அன்னூரில் வேளாண்துறை சார்பில் விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு நடந்தது. விதை சான்று அலுவலர் சுந்தர வடிவேலு பேசுகையில்,

""தரமான விதை உற்பத்தி செய்ய, சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும். விதைப்பண்ணை அமைத்தால், நல்ல வருமானம் பெற வாய்ப்பு உள்ளது," என்றார். வேளாண் அலுவலர் மீனாம்பிகை பேசுகையில்,""தமிழக அரசு இந்த ஆண்டுக்கு உணவு தானிய உற்பத்தி 115 லட்சம் டன் என இலக்கு நிர்ணயித்துள்ளது. உணவு தானிய உற்பத்தி திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் கீழ், பயறு வகைகளுக்காக சான்று விதை, நுண் சத்து, உயிர் உரம், ஜிப்சம் வினியோகிக்கவும், செயல் விளக்கம் செய்யவும், அன்னூர் வட்டாரத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பயறு சாகுபடி செய்யும் விவசாயிகள் இதை பயன்படுத்திக் கொள்ளலாம்," என்றார். வேளாண் உதவி இயக்குனர் சீனிராஜ் பேசுகையில்,""அன்னூர் வட்டாரத்தில் 33 எக்டேரில் மட்டும் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. துவரை சாகுபடியை ஊக்குவிக்க செயல் விளக்க திடல் அமைக்க, ஒரு எக்டேருக்கு 5,000 ரூபாய் வழங்கப்படுகிறது. கூடுதல் தகவல்களுக்கு அன்னூர் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம்," என்றார். அலுவலக வளாகத்தில், மாதிரி துவரை சாகுபடி திடலில் செயல் விளக்கம்

செய்து காண்பிக்கப்பட்டது. பசூர், ஓரைக்கால்பாளையம், அன்னூர், காரேகவுண்டன்பாளையம், கஞ்சப்பள்ளி விவசாயிகள் பங்கேற்றனர்.

**பார்த்தீனியம் செடிகளை அழிப்பது எப்படி? வேளாண் துறை செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2011,23:08 IST

கருத்தை பதிவு செய்ய

பெ.நா.பாளையம் : பார்த்தீனியம் செடிகளை அழிப்பது எப்படி என பெரியநாயக்கன்பாளையம் வேளாண்மை துறையினர் பொதுமக்களுக்கு செயல் விளக்கமளித்தனர்.

பெரியநாயக்கன்பாளையம் வட்டாரம், கூடலூர் கிராமம் தேவையம்பாளையத்தில் பார்த்தீனியம் நச்சுகளை ஒழிப்பு விழிப்புணர்வு முகாம் நடந்தது. நிகழ்ச்சியில், வேளாண்மை அலுவலர் வசந்தி வரவேற்றார். பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய தலைவர் விஜயன் தலைமை வகித்தார்.

வேளாண்மை உதவி இயக்குனர் வசந்தரேகா பேசியதாவது: பார்த்தீனியம் நச்சு களையினால் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் பெருமளவு தீமை ஏற்படுகிறது. தனிநபர் ஒவ்வொருவரும் முன்வந்து செயல்பட்டால் மட்டுமே இதை முழுமையாக ஒழிக்க முடியும். 20 சதவீத சமையல் உப்பு கரைசல் தெளிப்பு, அட்ரசின், 2-4டி களைக்கொல்லி தெளிப்பு, மெக்சிகன் வண்டுகளை பரவச் செய்தல் வழியாக இதை கட்டுப்படுத்தலாம், என்றார்.

கூடலூர் பேரூராட்சி தலைவர் அறிவரசு பேசுகையில்,"" பொதுமக்கள், விவசாயிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மத்தியில் பார்த்தீனியம் அழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்றார். முகாமில், ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா வேளாண்மை மற்றும் ஊரக கல்லூரி முதல்வர் சங்கரலிங்கம், கல்லூரி விரிவுரையாளர்கள் சுகுந்தராஜன், ராம்மோகன், கற்பூரசுந்தரபாண்டியன், முரு கேசன் பேசினர். வேளாண்மை துறையினர் மற்றும் வித்யாலய வேளாண்மை கல்லூரி மாணவர்கள் செயல்விளக் கம் செய்து காட்டினர். துணை வேளாண்மை அலுவலர் தியாகராஜன் நன்றி கூறினார். முகாம் ஏற்பாடுகளை உதவி விதை அலுவலர் விஜயகோபால், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரமேசன், சிவராஜன் செய்து இருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புப்படி முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த அனுமதிக்க வேண்டும் கேரள முதல்–மந்திரி உம்மன் சாண்டிக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை, டிச.2–
சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின்படி, முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த அனுமதிக்க வேண்டும் என்று கேரள முதல்–மந்திரி உம்மன்சாண்டிக்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.
இதுதொடர்பாக தமிழ்நாடு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கேரள முதல்–மந்திரி உம்மன் சாண்டிக்கு நேற்று எழுதியுள்ள கடிதத்தின் விவரம் வருமாறு:–

எங்கள் கவலை

1–12–2011 அன்று நீங்கள் அனுப்பிய பேக்ஸ் செய்தி எனக்கு கிடைத்தது. நமது இரு மாநிலங்களும் மிக விரிவான பரஸ்பர நலன்களும், ஒத்துழைப்பும் பல விஷயங்களில் கொண்டிருக்கிறது என்ற உங்கள் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிற அதேநேரத்தில், சுப்ரீம் கோர்ட்டில் பல சட்டப்பூர்வ தாவாக்கள், தொழில்நுட்ப விவகாரங்கள் நிலுவையில் இருந்தாலும், இவைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.
இந்த சூழ்நிலையில், தமிழக எல்லையைத் தாண்டி நடக்கும் தேவையற்ற, ஆத்திரமூட்டும் செயல்களும், கேரளாவில் ஏற்படுத்தப்பட்டு உள்ள அச்ச உணர்வு ஏற்படுத்தும் புரளி தொடர்பான எங்கள் கவலையையும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.
மத்திய அரசு அமைத்த நிபுணர் குழுவின் அறிக்கையை பரிசீலித்த பிறகு, சுப்ரீம் கோர்ட்டு, முல்லைப்பெரியாறு அணையின் கொள்ளளவு மட்டத்தை 142 அடியாக உயர்த்த உத்தரவிட்டுள்ளது.

அதிகாரக்குழு ஆய்வு

கேரள அரசு, சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவை செல்லத்தகாததாக ஆக்கும் வகையில் கேரள நீர்ப்பாசன மற்றும் நீர் பாதுகாப்பு சட்டத்தை 2006–ல் திருத்தி, சுப்ரீம் கோர்ட்டில் இருக்கும் அரசியல் சட்ட விவகாரத்திற்கு மாறாக அணையின் முழு நீர்த்தேக்க அளவை நிர்ணயித்தது.
ஓய்வுபெற்ற இந்திய தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையிலான அதிகாரக்குழு, அணையின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்து வருகிறது. தமிழக அரசு 1980–ம் ஆண்டு முதல் 1994–ம் ஆண்டு வரை இந்த அணையை வலுப்படுத்த மத்திய நீர் ஆணைய தலைவரின் பரிந்துரைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாதிரி சோதனைக்கு ரூ.1.38 கோடி ஒதுக்கீடு

இந்த நடவடிக்கைகளை எல்லாம் எடுத்த பிறகு, முல்லைப்பெரியாறு அணை ஒரு புதிய அணை போல மிகவும் நன்றாக இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டும் இந்த கருத்தோடு ஒன்றி நிற்கும் வகையில் அணையில் தண்ணீரை 142 அடி உயரத்திற்கு தேக்கி வைக்க தமிழக அரசுக்கு அனுமதி அளித்து 2006–ம் ஆண்டு பிறப்பித்த தீர்ப்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.
சுப்ரீம் கோர்ட்டு நியமித்த, அதிகாரக் குழு பல்வேறு ஆய்வுகளை, சோதனைகளை

நீருக்கு அடியில் ஊடுருவி சென்று நடத்தும் சோதனை, கேபிள் ஆங்கர் பரிசோதனை போன்ற பல சோதனைகளை நடத்தியது. இன்னும் சில சோதனைகள் நடந்து வருகின்றன. சமீபத்தில் எனது அரசு இத்தகைய மாதிரி சோதனைகளுக்காக மட்டும் ரூ.1 கோடியே 38 லட்சம் ஒதுக்கியுள்ளது.

அணையில் நிலநடுக்கத்திற்கு வாய்ப்பில்லை

நீங்கள் மேலும் உங்கள் கடிதத்தில் கடந்த 4 மாதங்களில் மட்டும் 22 முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டதாக குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இந்திய வானிலை ஆய்வுத் துறையின் புள்ளி விவரப்படி கடந்த 4 மாதங்களில் 4 சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் அதுவும், முல்லைப்பெரியாறு அணையில் இருந்து வெகுதூரத்தில்தான் ஏற்பட்டுள்ளது.


இந்த நில நடுக்கங்கள் அணையில் எந்தவிதமான கசிவையும் உண்டாக்கும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இந்த அணையில் உள்ள கசிவு, இந்திய தர நிர்ணயம் அனுமதிக்கும் அளவுக்கு உட்பட்டே இருக்கிறது. முல்லைப்பெரியாறு அணை பகுதியில் ஒரு நடுத்தர அளவு நில நடுக்கத்திற்குகூட வாய்ப்பு இல்லை. முல்லைப்பெரியாறு அணை, வெள்ளநீரால் உடைப்பு எடுப்பதற்கோ, இடிந்து விழுவதற்கோ எந்தவிதமான வாய்ப்பும் கிடையாது. ஏனெனில், இந்த அணையை வலுப்படுத்தியதால் எந்தவித சம்பவங்களும் நடக்க வாய்ப்பு இல்லை.

142 அடியாக உயர்த்த நடவடிக்கை

எனது அரசும், நானும் ஒவ்வொரு இந்தியனுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று எப்போதும் கோரும் நிலையில், அடிப்படை உண்மைகளை மீறி ஏற்படும் தேவையற்ற அச்சங்களை நாம் தடுக்க வேண்டும். அரசு மட்டத்தில், நாம் எடுக்கும் முடிவு உண்மையான நிலைமைகளின் அடிப்படையில்தான் இருக்க வேண்டுமே தவிர, உண்மைக்கு புறம்பான விஷயங்களின் அடிப்படையில் இருக்கக்கூடாது.

இந்த சூழ்நிலையில், சுப்ரீம் கோர்ட்டு இந்த அணையின் அனைத்து பாதுகாப்பு அம்சங்களையும் பரிசீலித்து, அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த அனுமதித்த உத்தரவை கேரள அரசு பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என்று உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய முழு ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் எப்போதும் உண்டு என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## நவம்பர் 19–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 8 சதவீதமாக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நவம்பர் 19–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் கடந்த நான்கு மாதங்களில் இல்லாத அளவிற்கு 8 சதவீதமாக குறைந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் 9.01 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இப்பணவீக்கம் 1.01 சதவீதம் குறைந்துள்ளது.

கோதுமை

அதேசமயம், கடந்த ஓர் ஆண்டில் கோதுமை, வெங்காயம், உருளைக்கிழங்கு நீங்கலாக இதர அத்தியாவசிய பொருள்கள் விலை மிகவும் அதிகரித்துள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் கோதுமை விலை 4.71 சதவீதமும், உருளைக்கிழங்கு விலை 10.98 சதவீதமும் குறைந்துள்ளது. வெங்காயம் விலை 40.65 சதவீதம் குறைந்துள்ளது.

இந்நிலையில், பருப்பு வகைகள் மற்றும் பால் விலை முறையே 13.80 சதவீதம் மற்றும் 11.41 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 13.55 சதவீதம் உயர்ந்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில் ஓர் ஆண்டு கால அடிப்படையில் காய்கறி விலை 5.13 சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்த சில மாதங்களாக காய்கறிகள் விலை ஓர் ஆண்டு கால அடிப்படையில் இரட்டை இலக்க அளவிற்கு உயர்ந்து இருந்தது. பழங்கள் மற்றும் தானியங்கள் விலை ஓர் ஆண்டில் 7.98 சதவீதம் மற்றும் 1.97 சதவீதம் உயர்ந்துள்ளது.

உணவு சாரா பொருள்கள்

எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் நவம்பர் 12–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 4.05 சதவீதமாக இருந்தது. இது, தற்போது 2.14 சதவீதமாக குறைந்துள்ளது. இந்த பணவீக்கம் தொடர்ந்து குறைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. எரிபொருள் மற்றும் எரிசக்தி பணவீக்கம் 15.49 சதவீதத்திலிருந்து 15.53 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள முதன்மை பொருள் பணவீக்கம் 9.08 சதவீதத்திலிருந்து 7.74 சதவீதமாக குறைந்துள்ளது. கடந்த 2010 டிசம்பர் மாதத்திலிருந்து பொது பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்து வருகிறது. கடந்த அக்டோபர் மாதத்தில் இது 9.73 சதவீதமாக இருந்தது.

வட்டி விகிதங்கள்

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி கடந்த 2010 மார்ச் மாதத்திலிருந்து இதுவரை முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 13 முறை உயர்த்தி உள்ளது. இதன் தாக்கத்தால், நடப்பு நிதி ஆண்டின் இரண்டாவது காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஒன்பது காலாண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.9 சதவீதமாக குறைந்துள்ளது.

எனவே, பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், மத்திய அரசு உணவு தானியங்கள் உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறது.

## *முதல் 2 மாதங்களில் காபி ஏற்றுமதி 10% குறைந்தது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*மும்பை*
*நடப்பு காபி பருவத்தில் முதல் இரண்டு மாதங்களில் (அக்டோபர், நவம்பர்) நாட்டின் காபி ஏற்றுமதி 10.2 சதவீதம் சரிவடைந்து 38,598 டன்னாக குறைந்துள்ளது. எனினும் மதிப்பின் அடிப்படையில் ஏற்றுமதி 11.63 கோடி டாலராக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதங்களில் 10.03 கோடி டாலராக இருந்தது. காபி வாரியம் இந்த புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது.*
*உலக அளவில் காபி உற்பத்தியில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது. எனினும் உலக காபி உற்பத்தியில் நம் நாட்டின் பங்களிப்பு 4.5 சதவீதம் என்ற அளவில்தான் உள்ளது. நாட்டில் உற்பத்தியாகும் மொத்த காபியில் 80 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலிருந்து காபி இறக்குமதி செய்வதில் இத்தாலி, ரஷ்யா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் முன்னிலையில் உள்ளன. இந்தியாவில் ஒவ்வொரு பருவத்திலும் சராசரியாக 90,000 டன் காபி உற்பத்தி செய்யப்படுகிறது. எனினும் நடப்பு 2011–12 பருவத்தில் உற்பத்தி 85,000 டன் அளவிற்கே இருக்கும் என அண்மைக் கால ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. நம் நாட்டில் காபி உற்பத்தியில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்களிப்பு சுமார் 70 சதவீதமாகும். காபி உற்பத்தி துறை சுமார் 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.*